# கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானது கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடுகளையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் எதுவித செயற்பாட்டு விளைவுகளும் காட்டப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகையாகிய ரூபா 525,010 தொகை முன்கொண்டுவரப்பட்டிரந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கடலில் இடம் பெறுகின்ற தவறுகளுக்காக நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும் தடை செய்யப்பட்ட பொருட்களை அரசுடைமையாக்குவதற்கும் அப்பொருட்களை உள்ளடக்கிய உபகரணங்களை ஏலத்தில் விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தை வெகுமதி நிதியத்திற்குச் செலவுவைப்பதற்கும், அந்த பணத்திலிருந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பங்குபற்றுவோருக்கும் வெகுமதியாக கடற்றொழில் நிதியத்திலிருந்து செலுத்தக்கூடிய உச்ச அளவு பணம் ரூபா 5,000 ஆக இருக்கவேண்டுமெனவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கிணங்க இந்த அதிகாரச் சட்டம் மற்றும் அமுலிலுள்ள கட்டளைகளை மீறுதல் தொடர்பான பல்வேறு குற்றங்களின் கீழ் மீளாய்வாண்டில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 187 ஆகும். வழக்கு பூர்த்தியடைந்து ஏளவிற்பனை நடவடிக்கைகள் இடம்பெறாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது பல்வேறு வெகுமதி நிதியத்திற்கு நிதிகள் கிடைத்திருக்கவில்லை.